KALAM -International Research Journal
Faculty of Arts and Culture
South Eastern University of Sri Lanka
Volume X Issue 2, 2016

# தொல்காப்பிய உரியியலில் நிகண்டுகளுக்கான அடிப்படைகள்

**ராஹிலா ஷியாத்**
சிரேஷ்ட விரிவுரையாளர்
மொழித்துறை
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

## அறிமுகம்

தமிழ் இலக்கணத்தை அறிந்து கொள்வதில் பழைமையான நூலாக விளங்கும் தொல்காப்பியத்தில் எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும் மொழியின் இலக்கணத்தையும் பொருளதிகாரம் இலக்கியப் பொருள் மரபினையும் செய்யுளிலக்கணத்தையும் எடுத்துக் கூறுவனவாக அமைந்துள்ளன. பொதுவாக தொல்காப்பியத்தைப் பொறுத்தவரையில் நூல் முழுவதும் சொற்பொருள் விளக்கக் கூறுகள் அமைந்துள்ளன. சொல்லதிகாரத்தில் சொற்கள் பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச் சொல், உரிச்சொல் என நான்காக வகுக்கப்பட்டு இலக்கண அடிப்படையில் பொருள் விளக்கம் செய்யப்பட்டுள்ளன. ‘எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே’[1] என்ற நூற்பாவின் மூலம் பொருளை விளங்கிக் கொள்வதற்கான கருவியே சொல் என்று தொல்காப்பியாறு குறிப்பிடுகின்றார். மேலும் பெயர்ச் சொற்களும் வினைச் சொற்களும் தனித்து நின்று பொருள் தரும் என்றும் இடைச் சொற்களும் உரிச்சொற்களும் பெயரையும் வினையையும் சார்ந்து நின்று பொருள் தரும் என்றும் கூறுகிறார்.

‘சொல்லெனப் படுவ பெயரே வினையென்று

ஆயிரண்டு என்ப அறிந்திசி னோரே’
‘இடைச்சொற் கிளவியும் உரிச்சொற் கிளவியும்
அவற்று வழி மருங்கில் தோன்றும் என்ப’[2]

தொல்காப்பியர் இடையியல், உரியியல், மரபியல் ஆகிய பகுதிகளில் சொற்களுக்குப் பொருள் விளக்கம் செய்துள்ளார்.

இடையியலில் மன், தில், கொன், உம், ஓ, ஏ, என, என்று, மற்று, எற்று, மற்றையது, மன்ற, தஞ்சம், அந்தில், கொல், எல்,ஆர், குரை, மா, மியா, இக, மோ, மதி, இகும், சின், அம்ம, ஆங்க, யா, கா, பிற, பிறக்கு, அரோ, போ, மாது, ஆக, ஆகல், என்பது, ஔ, எனா, என்றா, ஒடு என நாற்பதுக்கு மேற்பட்ட இடைச்சொற்களுக்கு பொருள்கள் விளக்கம் தரப்பட்டுள்ளது.

தொல்காப்பியர் உரியியலில் ஒரு சொல் ஒரு பொருள், ஒரு சொல் பல பொருள், பல சொல் ஒரு பொருள் என்ற அமைப்பில் சுமார் 120 சொற்களுக்கு பொருள் விளக்கம் செய்துள்ளார். இவற்றுள் ஒரு சொல் ஒரு பொருள் குறித்து வரும் சொற்களாக 45 சொற்கள் இடம் பெற்றுள்ளன. அவற்றுள் பத்து சொற்கள் இங்கு உதாரணத்துக்காக தரப்பட்டுள்ளன (பார்க்க அட்டவணை 1).

தொல்காப்பியத்தில் ஒரு சொல் பல பொருள் என்ற அடிப்படையில் சுமார் 15 சொற்கள் இடம் பெற்றுள்ளன (பார்க்க அட்டவணை 2).

மேலும், தொல்காப்பியத்தில் பல சொல் ஒரு பொருள் என்ற அடிப்படையில் சுமார் 23 சொற்களுக்கு பொருள் கூறப்பட்டுள்ளன (பார்க்க அட்டவணை 3):

தொல்காப்பியத்தின் இறுதி இயலாக அமைந்துள்ள பொருளதிகாரதத்தில் இடம் பெற்றுள்ள மரபியலிலும் சொற்களுக்குப் பொருள் கூறப்பட்டுள்ளது. அதாவது பொதுமரபிற்கு உரியவை என பார்ப்பு, பறழ், குட்டி, குருளை, கன்று, பிள்ளை, மகவு, மறி, குழவி என ஒன்பது இளமைப் பெயர்களும் ஆண்பாற் பெயர்களாக ஏறு,

ஏற்றை, ஒருத்தல், களிறு, சே, சேவல், இரலை, கலை, மோத்தை, தகர், உதள், அப்பர், போத்து, கண்டி, கடுவன் ஆகிய பதினைந்து பெயர்களும் பெண்பாற் பெயர்களாக பேடை, பெடை, பெட்டை, பெண், மூடு, நாகு, கடமை, அளகு, மந்தி, பாட்டி, பிணை, பிணவு, பிடி என பதின்மூன்று பெயர்களும் கூறப்பட்டுள்ளன. மேலும், இளமைப் பெயர்கள், ஆண்பாற் பெயர்கள், பெண்பாற் பெயர்கள் என்பன விளக்கமாக இடம் பெற்றுள்ளமை நோக்கத்தக்கது.

மேலும் "குரங்கின் ஆணைக் கடுவன் எனவும் மரத்தில் வாழும் கூகையைக் கோட்டான் எனவும் சிவந்த வாயினையுடைய கிளியைத் தத்தை எனவும் வெவ்விய வாயினையுடைய பூனையைப் பூசை எனவும் ஆண் குதிரையைச் சேவல் எனவும் கரு நிறப் பன்றியை ஏனம் எனவும் எருமையுள் ஆணினை கண்டி எனவும் முடிவாகக் கூறப்பட்ட உலக வழக்குச் சொற்கள் இருப்பதால் கடமையை உணர்ந்தவர்கள் இவைகளையும் விலக்கமாட்டார்கள்"[3] என மருவிய சில வழக்குகளையும் கூறுகிறார்.

தொல்காப்பியத்திற்குப் பின்பு தோன்றிய சொற்பொருள் விளக்கும் நுல்களாக விளங்கும் நிகண்டுகள் தொல்கப்பியத்தில் இடம்பெற்றுள்ள இடையியல், உரியியல், மரபியல் ஆகிய மூன்று பிரிவுகளையும் அடிப்படையாகக் கொண்டு தோன்றியுள்ளன என சுந்தரசண்முகனார்[4] கூறுகிறார். இக்கருத்துக்கு வலுச் சேர்ப்பதற்காக பின்வரும் கருத்துக்களை அவர் முன் வைக்கின்றார்.

1. சில இடங்களில் ஒரே பொருளைக் குறிக்கும் பல சொற்கள் கொடுக்கப்பட்டுள்ளன.
   எடுத்தக்காட்டாக, - மிகுதி என்னும் ஒரு பொருளைக் குறிக்க, உறு, தவ, நனி என மூன்று சொற்கள் கொடுக்கப்பட்டுள்ளன. பெருமை என்னும் ஒரு பொருளைக் குறிக்க, தட, கய, நளி என மூன்று சொற்களும் அச்சம் என்னும் பொருளைச் சுட்ட, பே, நாம், உரும் என்னும் மூன்று சொற்களும் கூறப்பட்டுள்ளன. இவை ஒரு பொருளைக் குறிக்கும் பல சொற்கள் ஆகையால் இவற்றிற்கு 'ஒரு பொருள் பல்பெயர்த் தொகுதி' எனப் பெயர் கொடுக்கலாம்.

2. சில இடங்களில் ஒரு சொல்லுக்குப் பல பொருள்கள் தரப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, - ஏற்றம் என்னும் ஒரு சொல்லுக்கு நினைவு, துணிவு என்னும் இரு பொருள்களும் விழுமம் என்னும் ஒரு சொல்லுக்கு சீர்மை, சிறப்பு, இடும்பை என்னும் மூன்று பொருள்களும் சொல்லப்பட்டுள்ளன. கடி என்னும் ஒரே சொல்லுக்கு வரைவு, கூர்மை, முதலிய 12 பொருள்கள் கூறப்பட்டுள்ளன. ஒரு சொல்லுக்கு பல பொருள்கள் கொடுக்கப்பட்டிருப்பதால்
   இவற்றிற்கு 'ஒரு சொல் பல்பொருட் பெயர்த்தொகுதி' எனப் பெயர் தரலாம். சொல்லுக்குப் பொருள் கூறும் (ர்ழஅழலெஅள) பகுதியாகிய இதிலேயே, ஒரு சொல்லுக்கு ஒரு பொருள் கூறியிருப்பதையும் அடக்கிக் கொள்ள வேண்டியதுதான்.

3. சில இடங்களில் பல பொருள்களின் கூட்டமாகிய தொகைப் பெயர்கள் - அதாவது – எண்ணிக்கையால் குறிக்கப்படும் பெயர்கள் விளக்கப்பட்டுள்ளன.
   எடுத்துக்காட்டாக, - மூன்று என்னும் எண்ணால் சுட்டப்படும் 'மூவறிவு' என்னும் தொகைப்பெயர், தொடு அறிவு, நாக்கறிவு, மூக்கறிவு என்னும் பல பொருள்களின் கூட்டத்தைக் குறிக்கிறது. அதேபோல், தொடு அறிவு, நாக்கறிவு, மூக்கறிவு, கண்ணறிவு, செவியறிவு என்னும் பல பொருள்களின் கூட்டத்தை 'ஐயறிவு' என்னும் தொகைப்பெயர் குறிக்கிறது. என்னும் பல பொருள்களின் கூட்டத்தைக் குறிக்கும் ஒரு தொகைப் பெயராக இருத்தலின் இவற்றிற்கு 'பல்பொருட் கூட்டத்து ஒரு பெயர்த் தொகுதி' எனப் பெயர் அளிக்கலாம்.

தொல்காப்பியத்திற்கு பின்பு தோன்றிய சொற்பொருள் கூறும் நூல்கள் எல்லாம்

உரிச்சொல், உரிச்சொல் பனுவல் என்று அழைக்கப்பட்டன. தமிழில் சொற்களுக்கு பொருள் கூறும் மரபு உரியியலில் காணப்பட்டாலும் பிற்காலத்தில் தோற்றம் பெற்ற சொற்பொருள் கூறும் நூல்கள் அனைத்தும் உரிச் சொற்களுக்கு மாத்திரமன்றி எல்லா வகையான சொற்களுக்கும் பொருள் கூறி இருந்தாலும் அவை உரிச்சொல் அல்லது உரிச்சொல் பனுவல் என்றே வழங்கப்பட்டன. இதே கருத்தையே சுந்தர சண்முகனார்,[5] வ. ஜெயதேவன்[6] போன்றோரும் கூறுகின்றனர். புசுநுபுமுசுலு துயுஆநுளு[7] அவர்கள் வையாபுரிப்பிள்ளையின் கருத்தை ஆதாரமாகக் கொண்டு இதனை வலியுறுத்துகிறார். பிங்கல நிகண்டின் சிறப்புப் பாயிரம் என்னும் பகுதியும் கயாதர நிகண்டின் பாயிரப் பகுதியும் இதற்கு ஆதாரமாக இவ்வாறு அமைகின்றன.

‘பிங்கல முனிவன் எனத்தன் பெயர் நிறீஇ

உரிச்சொற் கிளவி விரிக்குங் காலை’8

கயாதர நிகண்டின் பாயிரப் பகுதியில்,

‘.............தேவைக் கெயாதரன்றொல்

வேதியன் சொற்ற உரிச்சொற் பனுவலு மேம்படுமே’[9]

தொல்காப்பிய உரியியல், மரபியல் ஆகியவற்றில் இடம் பெற்றுள்ள பெரும்பாலான நூற்பாக்கள் திவாகர நிகண்டில் பண்பு பற்றிய பெயர்த் தொகுதியிலும் செயல் பற்றிய பெயர்த் தொகுதியிலும் ஒருசொற் பல்பொருள் தொகுதியிலும் விலங்கின்பெயர்த் தொகுதியிலும் இடம் பெற்றுள்ளன. இதற்கு எடுத்துக்காட்டாக தொல்காப்பிய உரியியலில் இடம் பெற்றுள்ள சில நூற்பாக்கள் சேந்தன் திவாகர நூற்பாக்களோடு ஒப்பு நோக்கப் பட்டுள்ளன (பார்க்க அட்டவணை 4).

தொல்காப்பிய மரபியலில் இடம் பெற்றுள்ள நூற்பாக்கள் சேந்தன் திவாகரத்தில் இவ்வாறே வந்துள்ளன (பார்க்க அட்டவணை 5). உதாரணத்துக்கு சில நூற்பாக்கள்:

இவை தவிர, நூன்மரபு, புணரியல், இடையியல், எச்சவியல், புறத்திணையியல், உவமயியல், செய்யுளியல் ஆகியவற்றிலுள்ள சில நூற்பாக்கள் திவாகர நிகண்டில் ஒலி பற்றிய பெயர்த் தொகுதியிலும் வேற்றுமையியலில் உள்ள சில நூற்பாக்கள் இடப் பெயர்த் தொகுதியிலும் எடுத்தாளப்பட்டுள்ளன.

தொகுத்து நோக்குகின்றபோது, தொல்காப்பிய இடையியல், உரியியல், மரபியல் ஆகிய இடம் பெற்றுள்ள பெரும்பாலான நூற்பாக்கள் நிகண்டுகளுக்கு அடிப்படைகளாக அமைந்துள்ளன என்று கூறும் சுந்தர சண்முகனார், ஜெயதேவன் ஆகியோரின் கருத்துக்களும் உரிச்சொல் என்ற பெயர் தொடர்ந்து நிகண்டு நூல்களில் கையாளப்பட்டு வந்தமையும், தொல்காப்பிய உரியியல், மரபியல் ஆகிய பகுதிகளில் இருந்து பெரும்பாலான நூற்பாக்கள், தமிழில் தோன்றிய முதல் நிகண்டாகக்கருதப்படும் திவாகரத்தில் ஒலி, பண்பு, செயல், ஒருசொற் பல்பொருள் ஆகிய பெயர்த் தொகுதிகளில் இடம்பெற்றிருப்பதும் தொல்காப்பியத்தில் நிகண்டுகளின் தோற்றத்திற்கான அடிப்படைகள் வலுவாகக் காணப்படுகின்றன என்ற முடிவுக்கு வர இடந்தருகின்றன.

1. **தொல்காப்பியம் புலியூர் கேசிகன் தெளிவுரை,** (தொல்: சொல்: 155) பாரி நிலையம், சென்னை, 1993, ப. 193

2. **தொல்காப்பியம் புலியூர் கேசிகன் தெளிவுரை**, (தொல்: சொல்: 158,159) பாரி நிலையம், சென்னை, 1993, பக். 193, 194

3. **தொல்காப்பியம் புலியூர் கேசிகன் தெளிவுரை**, (தொல்: மரபியல்: 69) பாரி நிலையம், சென்னை, 1993, ப. 449

4. சுந்தரசண்முகனார், **தமிழ் அகராதிக்கலை,** புதுவை பைந்தமிழ் பதிப்பகம், 1965, பக். 62, 63

5. ஜெயதேவன்,வ., **தமிழ் அகராதிக் கவையின் வளர்ச்சி வரலாறு,** ஐந்திணைப் பதிப்பகம், சென்னை, 1985, ப. 65

6. புசநபழசல துயஅநள**இ யு ாளைவழசல ழக வுயஅடை னுைஉவழைெயசநைளஇ** மயசியபயஅ புயசனநளெஇ யுனலயசஇ ஊாநயெைஇ 2000இ ி.61

7. பிங்கல முனிவர், **பிங்கல நிகண்டு**, (பாயிரம்), (தி. சிவன்பிள்ளை, தி. க. சுப்பராய செட்டியார், ப.ஆ) இந்து தியலாஜிகல் யந்திரசாலை, 1890.

8. கயாதரர், **கயாதர நிகண்டு**, (பாயிரம்), (எஸ். வையாபுரிப்பிள்ளை, ப.ஆ), சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை,1939.

## பின்னிணைப்பு

அட்டவணை 1.

| | ஒரு சொல் | ஒரு பொருள் | தொல்காப்பிய நூற்பா |
|---|---|---|---|
| 01 | மல்லல் | வளன் | 'மல்லல் வளனே' (தொல்.உரி.303) |
| 02 | ஏ | பெருக்கம் | 'ஏபெற் றாகும்' (தொல்.உரி.304) |
| 03 | உகப்பு | உயர்தல் | 'உகப்பே உயர்தல் உவப்பே உவகை' (தொல்.உரி.305) |
| 04 | உவப்பு | உவகை | 'உகப்பே உயர்தல் உவப்பே உவகை' (தொல்.உரி.305) |
| 05 | பயப்பு | பயன் | 'பயப்பே பயனாம்' (தொல்.உரி.306) |
| 06 | பசப்பு | நிறன் | 'பசப்புநிறன் ஆகும்' (தொல்.உரி.307) |
| 07 | இயைபு | புணர்ச்சி | 'இயைபே புணர்ச்சி' (தொல்.உரி.308) |
| 08 | இசைப்பு | இசை | 'இசைப்பு இசையாகும்' (தொல்.உரி.309) |
| 09 | சீர்த்தி | மிகுதியான புகழ் | 'சீர்த்திமிகு புகழ்' (தொல்.உரி.312) |
| 10 | மாலை | இயல்பு | 'மாலை இயல்பே' (தொல்.உரி.313) |

அட்டவணை 2.

| | ஒரு சொல் | பல பொருள் | தொல்காப்பிய நூற்பா |
|---|---|---|---|
| 01 | உரு | மிகுதி, அச்சம் | 'அவைதாம்<br>உறுதவ நனியென வருஉ மூன்றும்<br>மிகுதி செய்யும் பொருள என்ப' (தொல்.உரி.299) |
| 02 | தட | பெருமை, வளைவு | 'தடவும் கயவும் நளியும் பெருமை' (தொல்.உரி.320)<br>'அவற்றுள் தடஎன் கிளவி கோட்டமும் செய்யும்' (தொல்.உரி. 321) |
| 03 | கய | பெருமை, மென்மை | 'தடவும் கயவும் நளியும் பெருமை' (தொல்.உரி.320)<br>'கயவென் கிளவி மென்மையும் செய்யும்'(தொல்.உரி.322) |
| 04 | நளி | பெருமை, செறிவு | 'தடவும் கயவும் நளியும் பெருமை' (தொல்.உரி.320)<br>'நளியென் கிளவி செறிவும் ஆகும்' (தொல்.உரி.323) |
| 05 | ஏற்றம் | நினைவு, துணிவு | 'ஏற்றம் நினைவும் துணிவும் ஆகும்' (தொல்.உரி.337) |
| 06 | படர் | நினைத்தல்,செல்லுதல் | 'படரே உள்ளல் செலவும் ஆகும்' |

| | | | |
|---|---|---|---|
| | | | (தொல்.உரி.340) |
| 07 | தா | வலி, வருத்தம் | 'தாவே வலியும் வருத்தமும் ஆகும்'(தொல்.உரி.344) |
| 08 | விறப்பு | செறிவு, வெருவுதல் | 'விறப்பும் உறப்பும் வெறுப்பும் செறிவே' (தொல்.உரி.347)<br>'அவற்றுள்<br>விறப்பே வெரூஉப் பொருட்டும் ஆகும்' (தொல்.உரி. 348) |
| 09 | அழுங்கல் | அரவம்,இரக்கம், கேடு | 'கம்பலை சும்மை கலியே அழுங்கல் என்றிவை நான்கும் அரவப் பொருள'(தொல்.உரி.349)<br>'அவற்றுள்<br>அழுங்கல் இரக்கமும் கேடும் ஆகும்' (தொல்.உரி.350) |
| 10 | செழுமை | வளன், கொழுப்பு | 'செழுமை வளனும் கொழுப்பும் ஆகும்'(தொல்.உரி.352) |
| 11 | விழுமம் | சீர்மை, சிறப்பு, துன்பம் | 'விழுமம் சீர்மையும் சிறப்பும் இடும்பையும்' (தொல்.உரி.353) |
| 12 | இரங்கல் | இசைப்பொருள், கழிவு | 'துவைத்தலும் சிலைத்தலும் இயம்பலும் இரங்கலும்<br>இசைப்பொருட் கிளவி என்மனார் புலவர்'(தொல்.உரி.358)<br>'அவற்றுள்<br>இரங்கல் கழிந்த பொருட்டும் ஆகும்' (தொல்.உரி.359) |
| 13 | நனவு | அவைக்களம், அகலம் | 'நனவே களனும் அகலமும் செய்யும்' (தொல்.உரி.376) |
| 14 | மதவு | வன்மை, மென்மை | 'மதவே மடனும் வலியும் ஆகும்' (தொல்.உரி.378) |
| 15 | கடி | வரைவு, கூர்மை, பாதுகாப்பு, புதுமை, விரைவு, விளக்கம், மிகுதி, சிறப்பு, அச்சம், முன்தேற்று | 'கடியென் கிளவி<br>வரைவே கூர்மை காப்பே புதுமை<br>விரைவே விளக்கம் மிகுதி சிறப்பே<br>அச்ச முன்தேற்றும் ஆயீ ரைந்தும்<br>மெய்படத் தோன்று பொருட்டாகும்மே' (தொல்.உரி.383) |

அட்டவணை 3.

| | பல சொல் | ஒரு பொருள் | தொல்காப்பிய நூற்பா |
|---|---|---|---|
| 01 | உரு, தவ, நனி | மிகுதி | ‘அவைதாம்<br>உறுதவ நனியென வரூஉ மூன்றும்<br>மிகுதி செய்யும் பொருள என்ப’<br>(தொல்.உரி.299) |
| 02 | குரு, கெழு | நிறன் | ‘குருவும் கெழுவும் நிறனா கும்மே’(தொல்.உரி.301) |
| 03 | சொல்லல், இன்னல் | துன்பம் | ‘செல்லல் இன்னல் இன்னாமையே’<br>(தொல்.உரி.302) |
| 04 | அலமரல், தெருமரல் | சுழற்சி | ‘அலமரல் தெருமரல் ஆயிரண்டும் சுழற்சி’(தொல்.உரி.310) |
| 05 | மழ, குழ | இளமை | ‘மழவும் குழவும் இளமைப் பொருள’(தொல்.உரி.311) |
| 06 | கூர்ப்பு, கழிவு | உள்ளதுசிறக்கு ம் | ‘கூர்ப்பும் கழிவும் உள்ளது சிறக்கும்’(தொல்.உரி.314) |
| 07 | கதழ்வு, துனைவு | விரைவு | ‘கதழ்வும் துனைவும் விரைவின் பொருள’(தொல்.உரி.315) |
| 08 | வார்தல், போகல், ஒழுகல் | நேர்மை | ‘வார்தல் போகல் ஒழுகல் மூன்றும்<br>நேர்பும் நெடுமையும் செய்யும் பொருள’(தொல்.உரி.317) |
| 09 | தீர்த்தல், தீர்தல் | விடுதலை | ‘தீர்தலும் தீர்த்தலும் விடல்பொருட்டாகும்’<br>(தொல்.உரி.318) |
| 10 | கெடவரல், பண்ணை | விளையாட்டு | ‘கெடவரல் பண்ணை ஆயிரண்டும் விளையாட்டு’<br>(தொல்.உரி. |

அட்டவணை 4.

| | தொல்காப்பிய நூற்பாக்கள் | திவாகர நிகண்டு நூற்பாக்கள் | இடம் பெற்றுள்ள தொகுதியின் பெயர் |
|---|---|---|---|
| 01 | 'அலமரல் தெருமரல் ஆயிரண்டும் சுழற்சி' (தொல். உரி. 310) | 'அலமரல் கொட்பு கறங்கு சுழல்வு தெருமரல் சுழற்சி ஆமெனச் செப்புவர்' (181) | பண்பு பற்றிய பெயர்த் தொகுதி |
| 02 | 'சீர்த்தி மிகுபுகழ்' (தொல். உரி. 310) | 'சீர்த்தியும் கீர்த்தியும் மிகுபுக ழாகும்' (226) | ஒலி பற்றிய பெயர்த் தொகுதி |
| 03 | 'கூர்ப்பும் கழிவும் உள்ளது சிறக்கும்' (தொல். உரி.314 ) | 'கூர்ப்பும் கழிவும் உள்ளது சிறத்தல்' (171) | பண்பு பற்றிய பெயர்த் தொகுதி |
| 04 | 'அதிர்வும் விதிர்ப்பும் நடுக்கம் செய்யும்' (தொல். உரி.316 ) | 'விதிர்ப்பு பனிப்பு விதலை கம்பம் அதிர்ப்பு பொதிர்ப்பு நடுக்க மாகும்' (203) | செயல் பற்றிய பெயர்த் தொகுதி |
| 05 | 'தடவும் கயவும் நளியும் பெருமை' (தொல். உரி.320 ) 'கயவென் கிளவி மேன்மையும் ஆகும்' (தொல். உரி.322 ) | 'கயவே பெருமையும் மேன்மையும் ஆகும்' (249) | ஒருசொற் பல்பொருட் பெயர்த் தொகுதி |
| 06 | 'நளியென் கிளவிசெறிவும் ஆகும்'(தொல். உரி.323 ) | 'நளியே பெருமையும் சீதமும் செறிவும்' (255) | ,, |
| 07 | 'மாதர் காதல்' (தொல். உரி.328 ) | 'மாதர் காதலும் மகளிரும் ஆகும்' (260) | ஒருசொற் பல்பொருட் பெயர்த் தொகுதி |
| 08 | 'ஒய்தல் ஆய்தல் நிழத்தல் சாஅய் ஆவயின் நான்கும் உள்ளதன் நுணுக்கம்' (தொல். உரி.330 ) | 'நுவணை நொய்வு நுழை அயிர் நுணங்கு சாயல் முளரி நுணுகு நுணுக்கம் ஆய்தல் நிழற்றல் நொசிவு நுனி கூர்மை ஆயவீரேழும் நுண்மையாகும்' (171) | பண்பு பற்றிய பெயர்த் தொகுதி |

| | | | |
|---|---|---|---|
| 09 | ‘புலம்பே தனிமை’ (தொல். உரி.331 ) | ‘புலம்பே தனிமையும் நடுக்கமும் புலம்பலும்’ (258) | ஒருசொற் பல்பொருட் பெயர்த் தொகுதி |

அட்டவணை 5.

| | **தொல்காப்பிய நூற்பாக்கள்** | **திவாகர நிகண்டு நூற்பாக்கள் (விலங்கின் பெயர்த் தொகுதி )** |
|---|---|---|
| 01 | ‘பேடையும் பெடையும் பெட்டையும்பெண்ணும் மூடும் நாகும் கடமையும் அளகும் முந்தியும் பாட்டியும் பிணையும் பிணவும் ஆந்தம் சான்ற பிடியொடு பெண்ணே’ (தொல். மரபு. 547) | ‘பெட்டையும் பிணையும் பிணாவும் ஆணும் நாகும் மூடும் கடமையும் பாட்டியும் மந்தியும் ஒருசார் விலங்கின் பெண்பெயர்’ (59) |
| 02<br>03 | ‘அவற்றுள் பார்ப்பும் பிள்ளையும் பறப்பவற்று இளமை’ (தொல். மரபு. 548)<br>‘தவழ்பவை தாமும் அவற்றோர் அன்ன’ (தொல். மரபு. 549) | ‘பார்ப்பும் பிள்ளையும் பறப்பவற்று இளமை’ (70)<br>‘பிள்ளையும் பார்ப்பும் தவழ்சாதி பெறுமே’ (62) |
| 04<br>05<br>06 | ‘நாயே பன்றி புலி முயல் நான்கும் ஆயுங் காலை குருளை என்ப’ (தொல்.மரபு.552)<br>‘நரியும் அற்றே நாடினர் கொளினே’ (தொல்.மரபு.553)<br>‘குட்டியும் பறழும் கூற்று அவண் வரையார்’ (தொல்.மரபு.554) | ‘புலியே பன்றி முயல் நாய்நரி யிவை குருளை பறழெனக் கூறினர் புலவர்’ (61) |
| 07 | ‘பிள்ளைப் பெயரும் பிழைப்பு ஆண்டு இல்லை கொள்ளும் காலை நாயலங் கடையே’ (தொல்.மரபு.555) | ‘பிள்ளைப் பெயரே நாயன்றிப் பெறுமே’ (61) |
| 08 | ‘யாடும் குதிரையும் நவ்வியும் உழையும் ஓடும் புல்வாய் உளப்பட மறியே’ (தொல்.மரபு.556 ) | ‘ஆடுமான் குதிரை அழுங்கு மறி என்ப’ (61) |